

தலைமைச் செயலகத்தில், நேற்று (11.07.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் “பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்” என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும் உறுப்பினர் செயலருமான முனைவர் சந்தீப் சக்சேனா, உறுப்பினர்கள், திருமதி ஏ.எஸ்.குமரி, சுந்தர ஆவுடையப்பன், வே.மதிமாறன், வாலாசா வல்லவன், சூர்யா சேவியர், செந்தலை கவுதமன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில்

## 20 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை 12 - தமிழ்நாட்டின் வட கடலோர பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, திருவண்ணா மலை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, ராமநாதபுரத்தில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யுமென்றும், ராணிப்பேட்டை, தேனி, திண்டுக்கல், நீலகிரி, கோவை, திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ஆகிய பகுதிகளில் லேசான மழை பெய்யும் எனவும் தெரிவித்துள்ளது.



பள்ளிகளின் அடிப்படை கட்டுமானமும், மாணவர்களின் கற்றலும் மேம்பாடு அடைய வேண்டுமென்றால் களத்தில் இறங்கி அவர்களுடன் உரையாட வேண்டும்; களத்தில் செயலாற்ற வேண்டும் எனும் முதலமைச்சர் அவர்களின் வழியில், தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் நோக்கத்தோடு 234/77 ஆய்வுப் பயணத் திட்டத்தை தொடங்கிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் முதல் பயணத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அத்திட்டத்தின் கீழ் 48 ஆவது தொகுதியாக எஸ்.பி.வேலுமணியின் தொண்டாமுத்தூர் தொகுதியில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் உரையாடி, ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். “எல்லோருக்கும் எல்லாம்” எனும் கொள்கையின் அடிப்படையில் ‘சிறப்புக் குழந்தைகளுக்கும் தடையில்லா கல்வி!’ என்பதை உறுதிசெய்ய அதே பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள வட்டார வள மையத்தினைப் பார்வையிட்டு மாணவச் செல்வங்கள் மற்றும் ஆசிரியரிடம் உரையாடினார்.

# அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை!

## அமைச்சர் முத்துசாமி பேட்டி!

சென்னை, ஜூலை 12 - அரசின் வருமானத்திற்காக மது விற்கவில்லை என்று அமைச்சர் முத்து சாமி கூறினார். சென்னை தலைமைச் செயலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்துறை முதன்மைச் செயலாளர் அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ரத்னா, தமிழ்நாடு மாநில வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் விசாகன் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் அமைச்சர் முத்து சாமி அளித்த பேட்டி வருமாறு: -

டாஸ்மாக் கடைகளுக்கும், கடையில் வசூலான பணத்தை செலுத்தும் ஊழியருக்கும் பாதுகாப்பு தேவை. வங்கி ஊழியரே கடைக்கு சென்று பணத்தை பெற்றுக்கொள்ளலாமா?



என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம். சென்னையில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் அது செயல்படுத்தப்படும்.

**வருமானத்திற்கு அல்ல**

மது விற்பனை செய்வது வருமானத்திற்கான நோக்கமல்ல. விற்பனையில் இலக்கு நிர்ணயிக்கப்படு வது, வருமானத்தை கூட்டுவதற்காக அல்ல. மது விற்பனை குறைந்தால் அதற்கு காரணம் என்ன? மது குடிப்பதை யாரும் நிறுத்தி இருக்கிறார்களா? அல்லது, மாற்றாக வேறு தவறான இடத்திற்கு செல்கிறார்களா? என்பதை கண்டறியவே இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

டாஸ்மாக் பாட்டில்களால் பல பிரச்சினைகள் உள்ளன. கண்ட இடங்களிலும் அவை வீசப்பட்டு விடுகின்றன. எனவே மது பாட்டிலுக்கு பதிலாக ‘டெட்ரா பாக்கெட்’ வரவேண்டும் என்று பல தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர். குறுகிய இடத்தில் அவற்றை வைக்கலாம். அவற்றை கையாள்வது எளிது. அதோடு உடைந்து நஷ்டம் ஏற்படுவது இருக்காது. எனவே அதனடிப்படையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. டெட்ரா பேக் மூலம் விற்பனை செய்து, அதை மறு சுழற்சியாக மீண்டும் பயன்படுத்தலாம்.

**கடை திறக்கும் நேரம்**

அதுபோல கடை திறக்கும் காலநேரம் பற்றி ஆய்வு செய்தபோது, காலை 7 மணியில் இருந்து 9 மணி வரை கட்டிட வேலை போன்ற கடுமையான உடலுழைப்பு வேலைக்கு செல்பவர்கள் மது கிடைக்காமல் சிரமம் அடைகிறார்கள் என்று கண்டறிந்தோம். அவர் களுக்காக என்ன ஏற்பாட்டை செய்யலாம்? என்பதில் இன்னும் முடிவெடுக்கவில்லை.

**கள் விற்பனை வருமா?**

உடலுக்கு நன்மை தரும் கள்ளை விற்பனை செய்வது பற்றி கேட்டால், விவசாயிகளை மனதில் வைத்து அதை செய்யலாம் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுகிறது என்பது மிக அருமையான விஷயம். விவசாயிகளின் நன்மை என்பதில் முதல் அமைச்சருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் கள் விற்பனையில் ஈடுபட்ட மாநிலங்களில் பல பிரச்சினை கள் எழுந்துள்ளன. அங்கு நடக்கும் தவறுகள் இங்கு வந்துவிடக் கூடாது என்பதையும் பார்க்க வேண்டியதுள்ளது.

இது பற்றி ஆய்வு செய்ய தனி கமிட்டியை நியமிக்க இருக்கிறோம். அதை ஒழுங்கு செய்த பிறகுதான் கள் விற்பனை பற்றி யோசிக்க முடியும். அந்த ஆய்வில், அந்த தவறுகளை கட்டுப்படுத்திவிட முடியும் என்று சொன்னால் அது பற்றி சிந்திப்போம். முதலில் ஆய்வறிக்கை வரட்டும். எம்.ஆர்.பி. விலைக்கு கூடுதலான விலைக்கு மது விற்பனை செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர் அதிகாரிகளுக்கு அதுபற்றி வந்த தகவல் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் மிகச் சில புகார்கள்தான் வந்தன. இவ்வாறு அவர் கூறினார்.

## மேயர் பிரியா ராஜன் - துணை மேயர் சி.மகேஷ்குமார் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மதுரவாயல் தொகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே ரூ. 74.36 கோடி மதிப்பீட்டில் இரண்டு உயர்மட்ட பாலம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர்கள் கே.என்.நேரு - மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, ஜூலை. 12 மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியின் மையப் பகுதியில் கூவம் ஆறு கடந்து செல்வது அனைவரும் அறிந்ததே. 143 வது வார்டு, நொளம்பூர் பகுதியிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் வகையில் இரண்டு தரைப் பாலங்கள் உள்ளன. 2022 ஆம் ஆண்டு கூவம் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூன்று பேர் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தனர்.

அதை கவனத்தில் கொண்ட மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மூலமாக தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இதை கருத்தில் கொண்டு, மதுரவாயல் தொகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே இரண்டு உயர் மட்ட மேம்பாலங்கள் 120 கோடி ரூபாய் செலவில் (தோராய மதிப்பீடு) கட்டப்படும் என்று கடந்த சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவித்தார்கள்.

இதன் ஆரம்ப கட்டப் பணிகள் முடிந்து இறுதியாக 74.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்று (12.7.2023 புதன்கிழமை) மதியம் 12.00 மணியளவில் இரண்டு மேம்பாலங்களின் கட்டுமான பணிகள் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இப்பணிகளை கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார்,

11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர், 146 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் எம்.சி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.பத்மபிரியா, தலைமை பொதுக்குழு உறுப்பினர், 154 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வ.செல்வகுமார் எம்.சி, மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், லயன் எஸ்.மணி, கே.குமரேசன், பொதுக்குழு உறுப்பினர் வீர.கனிமொழி,

பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி, கே.ராஜி எம்.சி, தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி, ம.உதயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ் எம்.சி, ஹேமலதா கணபதி எம்.சி, ச.சங்கர்கணேஷ் எம்.சி, சாந்தி ராமலிங்கம் எம்.சி, எம்.இ.ஸ்டாலின் எம்.சி, ரமணி மாதவன் எம்.சி, வட்ட கழகச் செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த. ரமேஷ், சி.சுந்தர், அ. மோசஸ், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில்

# பத்திரிகையாளர் நல வாரியக் கூட்டம்!

சென்னை,ஜூலை.12- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று (11.07.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஐந்தாவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் மற்றும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டன. மேலும், பத்திரிகையாளர் நல வாரிய நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுவதற்கும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான படிவங்கள் ஒப்புதல் பெறப்பட்டது மற்றும் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பொருண்மைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இதில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசியதாவது:

“தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அரசு பொறுப்பேற்ற பிறகு பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கூட்டத்தில் வைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களின் கோரிக்கைகள் நிச்சயமாக பரிசீலினை செய்து நிரந்தரமாக தீர்வு ஏற்படுகின்ற வகையிலும், அதனை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பத்திரிகையாளர் நல வாரியத்திற்காக அரசு எடுத்து வரும் ஆக்கபூர்வமான பணிகளுக்கு நீங்களும் உதவியாக இருக்கிறீர்கள். இந்தக் கூட்டத்தின் மூலம் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிற பல்வேறு பொருள்கள் அனைத்தும் விரைவில் பரிசீலிக்கப்படும். மேலும், கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள், ஏழைக் குடும்பத்தில் உள்ள பத்திரிகையாளர்களுக்கும் அரசின் திட்டங்கள்கிடைக்கக்கூடிய வகையில் நிச்சயம் நடைமுறைபடுத்தப்படும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை வாயிலாக கடந்த 1986ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 293 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 61 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது ஒரு நல்ல முன்னேற்றம், உதாரணம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தொடர்ந்து பல்வேறு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற பத்திரிகையாளர் நல வாரிய அலுவல்சார் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்றார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு. இரா.செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி.மு.விஜயலட்சுமி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் ஆர்.எம்.ஆர்.ரமேஷ், பி. கோலப்பன், திருமதி.லட்சுமி சுப்பிரமணியன், எஸ். கவாஸ்கர், எம்.ரமேஷ் அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எம்.யாசர்அராபத், ஏ.அசோக்குமார் ஏற்பாடு! தா.இளையஅருணா தலைமை! ஜே.ஜே.எபினேசர், இரா.லட்சுமணன் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் விழியிழந்தோர் இல்லத்தில் உணவு!

## இரா.விடுதலை வழங்கினார்! என்.மருதுகணேஷ், ப.குமார் பங்கேற்பு!

சென்னை ஜூலை:12 சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவையொட்டி விழிஇழந்தோர் இல்லத்தில் உணவு வழங்கும் நிகழ்ச்சி 08.07.2023 அன்று தண்டையார்பேட்டையில் உள்ள விழியிழந்தோர் இல்லத்தில் வழக்கறிஞர்கள் எம்.யாசர் அராபத், ஏ.அசோக்குமார், ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், பகுதிச் செயலாளர் இரா. இலட்சுமணன், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷ், வட்டச் செயலாளர் ப.குமார்,பகுதி அமைப்பாளர்கள் எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை தலைவர் இரா.விடுதலை பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி விழியிழந்தோருக்கு உணவு வழங்கினார்.

இதில் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர் கி.ராஜேந்திரன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், ஆர். டி.ராஜா,கே.பாலு, என். எம்.கதிரேசன், நா.கோதண்டன், ச.தமிழ்ச்செல்வன், ஆர்.பொன் இளவரசன், ப.ஆ.சண்முகம், எஸ்.சத்யநாராயணன், வி.முத்து, ஜெ.சுரேஷ்பாபு, எஸ். பி.எஸ்.புத்தன், எஸ்.எம்.டி. ரவிச்சந்திரன், ஜெ. காணிக்கைநாதன், ஜெ.தரணிதரன், டி.கிருஷ்ணமூர்த்தி, என். பிரேமதாசன், ஆர்.வேலுசாமி, ஏ.சாந்தகுமார், வி. கார்த்திக், கே.புருசோத்தமன், ஆர்.காளிதாஸ், ஆர். மகேஸ்வரன், எம்.கார்த்திக், ஆர்.ஜி.பாபு,வி.மோகன், வி.சத்யா, ஜி.ஏ.சிவமணி, மைக்கேல், எல்.பிரபாகரன், ரோமி,ராஜா, பிடிசி. இராஜா, ஆர்.கவிதா,கே. மணி, டி.ஜனா,பா.டேனியல், எஸ்.உதயசூரியன், எஸ்.லோகநாதன், எஸ்.டி. பாபு, எல்.கோகுல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று (11.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், பத்திரிகையாளர் நல வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி மு.விஜயலட்சுமி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆர்.எம்.ஆர். ரமேஷ், பி.கோலப்பன், திருமதி லெட்சுமி சுப்பிரமணியன், எஸ். கவாஸ்கர், எம். ரமேஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தஞ்சை கூத்தரசன் தலைமையில்

# “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் மாம்பலம் சந்திரசேகர் பேசுகிறார்!

## சென்னை பெரியார் திடலில் நாளை நடக்கிறது!

சென்னை, ஜூலை 12 - பெரியார் நூலக வாசகர் வட்டத் தலைவர் வழக்கறிஞர் திருமதி ஆ. வீரமர்த்தினி தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சுழல்கின்ற பூமிப் பந்தில் ஆகச் சிறந்த அற்புதப் பகுத்தறிவுப் பேராசான் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறை திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், நாளை ( 13.7.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை - 7, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி. ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அந்நிகழ்ச்சியில் நான் (ஆ. வீரமர்த்தினி) வரவேற்றுப் பேசுகிறேன். தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை. கூத்தரசன் தலைமை தாங்குகிறார். தென்மேற்கு சென்னை மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு அத்திப்பட்டு சாம்ராஜ், த.ஆதித்தன், ஆவடி பாஸ்கர், பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென்.மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். எனவே இந்நிகழ்ச்சிக்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென்று வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், சத்திரப்பட்டி ஊராட்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினார். அருகில் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி அய்யம்மாள், துணைத்தலைவர் திருமதி காயத்ரி தேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன் உட்பட பலர் உள்ளனர்.